[2000 மார்ச் 30

159—

பனியன் ஆலைகள்

***22694—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தாட்கோ மூலம் அமைக்கப்பட்டுள்ள பனியன் ஆலைகள் உற்பத்தியைத் தொடங்கி விட்டனவா?

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இதுவரை 35 தொழிற்கூடங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 100 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. அவற்றில் 35 தான் உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மீதியுள்ளவை முழு வீச்சில் உற்பத்தியைத் தொடங்க எவ்வளவு காலம் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35 தொழிற்கூடங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மொத்தம் 100 அலகுகள் முதலிபாளையத்தில் அமைக்கப்பட்டன. அதற்குக் கடந்த ஆண்டு நேர்முகத் தேர்வு நடந்து, 75 அலகுகள் ஒதுக்கப்பட்டன. ஒதுக்கப்பட்டவற்றில் உற்பத்தி தொடங்கப்பட்ட தொழிற் கூடங்கள் 35; நாணய உறுதிப் பத்திரக் கடிதம் பெறப்பட்டது 8; சிற்றுண்டிச்சாலைக்கு ஒதுக்கப்பட்டது 1; தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடன் மனுக்கள் மீது மறு மதிப்பீட்டிற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் பல்வேறு செயல் முறைக்காக ஒதுக்கப்பட்டது 12; தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் நடைமுறைக் கடன் ஒப்புதல் அளித்து இன்னும் பணம்பெற விண்ணப்பிக்காதவர்கள் 19; ஆக மொத்தம் 75 கூடங்கள் தொழில் தொடங்குவதற்கு ஆயத்தமான நிலையில் இருக்கின்றன. மீதம் உள்ள 25 கூடங்களுக்கு 19-2-2000-ல் தேர்வு நடந்து, இறுதிப் பணியை எட்டிக் கொண்டிருக்கின்றன. விரைவில் அந்த 25 கூடங்களிலும் தொழில்

2000 மார்ச் 30]

தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; திரு. நா. பெரியசாமி.

திரு. நா. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிபாளையத்தைப் போலவே பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் தாட்கோவின் மூலம் 200 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 200 தொழிற்கூடங்களும் பனியன் உற்பத்திக்காக மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும் என்று வரையறை செய்து ஒதுக்கினார்கள். பட்டியல் சாதியினர் சமுதாயத்திலே அப்படி பனியன் தொழில் மட்டுமே செய்யக்கூடியவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அது தொடர்புடைய எந்தத் தொழிலுக்காகவாவது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வாரா, விரைந்து முடிவு எடுப்பாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான நேர்முகத் தேர்வும் 17-2-2000 அன்று நடைபெற்றிருக்கிறது. இதற்குரிய வேலை வாய்ப்புகள்; 200 கூடங்கள் இருக்கின்றன. அதாவது 200 கூடங்களிலும் எந்தெந்தத் தொழில் செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அவற்றை ஆய்ந்து, அரசு முடிவு எடுத்து அதற்கேற்ப, அந்த விற்பனையாகக்கூடிய பொருட்களுக்கான உற்பத்தியைச் செய்து கொடுப்பதற்காகவும், அதே நேரத்தில் அந்த முன்மொழிவுகள் வரப்பெற்றால் அவர்களுக்குரிய தொழில்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுப்பதற்கும் நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 160, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

160—

பயணிகள் விடுதி

***17711—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—